Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# அருள்மிகு ஆத்மநாத சுவாமி கோயிலின் தல வரலாறு மற்றும் தலச் சிறப்புகள்

**முனைவர் வீ.ரோஜா**
இணை பேராசிரியர் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர்
சீதாலெட்சுமி ஆச்சி மகளீர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்.
Email ID: rojaveerappan1995@gmail.com

**தல வரலாறு**

ஆவுடையார் கோவில் அறந்தாங்கியிலிருந்து 13 கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் **"ஆவுடையார்"** என்று அழைக்கப்படுகிறார். இதை கொண்டே இவ்வூரும் ஆவுடையார்கோவில் என்று வழங்கப்படுகிறது. இவ்வூரின் பழைய பெயர் திருப்பெரந்துறை ஆகும். தமிழ் இலக்கியங்கள் இவ்வூரை திருப்பெருந்துறை என்று குறிப்பிடுகின்றன.

மதுரையைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்த இரண்டாம் வரகுண பாண்டிய மன்னனின் (862 – 880) அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர், மன்னனுக்கு குதிரைவாங்குவதற்கு கொண்டு வந்த பணத்தைக் கொண்டு இங்கு சிவபிரானுக்கு கோயில் கட்டி ஆவுடையார் என்று பெயரிட்டார் என கோயில் புராண நூல்கள் கூறுகின்றன.மன்னனின் கோபத்திற்கு ஆளான மாணிக்கவாசகரைக் காப்பாற்ற இறைவன்நரிகளைப் பரிகளாக மாற்றியதையும் இது தொடர்பான புராணக் கதைகளையும்திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

ஆவுடையார் கோவிலில் உள்ள ஆத்மநாத சுவாமி கோயில் மற்ற கோயில்களில் காணப்படாத பல சிறப்பு அம்சங்களைப் பெற்றிருக்கிறது. தமிழகத்திலுள்ள கோயில்கள் பொதுவாக கிழக்கு முகம் நோக்கியே இருக்கும். சில கோயில்கள் மேற்கு முகமாகவும் வேறு சில கோயில்கள் வடக்கு முகமாகவும் அமைந்துள்ளன. ஆனால் ஆவுடையார் கோயில் தெற்கு முகமாக அமைந்துள்ளது. தமிழகத்திலுள்ள கோயில்களிலெல்லாம் உருவ வழிபாடு காணப்படுகிறது. ஆனால் ரூபவ் இந்த கோயிலில் மட்டும் தான் அருவ வழிபாடு நடைபெற்று வருகிறது. மூலஸ்தானத்தில் சிலைகள் ஏதும் இல்லை. எங்கும்நிறைந்த இறைவன் அருவமாகவே வழிபடப்படுகின்றார்.

வழிபாட்டு முறைகளிலும் இந்த கோயில் மற்ற கோயில்களிலிருந்து வேறுபட்டு உள்ளது. கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தீபாரதணை செய்யும் தீபத்தைத் தொட்டு வணங்க அனுமதிப்பதில்லை. மாணிக்கவாசகர் ஜோதியில் கலந்துள்ளார்என்பதால் இந்த முறை பின்பற்றப்படுகிறது. கருவறைக்கு முன்னால் படையல் என்கின்ற பெரிய திட்டுக்கல் ஒன்று உள்ளது. இந்த கல்லில் தான் ஆறுகால பூசைக்கு உரிய அமுது வைக்கப்படுகிறது. இந்த

அமுதின் ஆவியை மட்டுமே சிவபெருமான் ஏற்றுக்கொள்வதாக நம்பப்படுகிறது. அமுது படைப்பது என்பது கைக்குத்தல் செய்யப்பட்ட புழுங்கல் அரிசியுடன் பாகற்காய் மற்றும் கீரை போன்ற வழிபாட்டு முறை தமிழகத்தில் உள்ள இதர சிவன் கோயில்களில் பின்பற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**தலச்சிறப்பு**

திருப்பெருந்துறை என்றும் நாமத்தின் பொருளை ஆதின முளிபுங்தவராகிய ஸ்ரீ கடவுன் மா முனிவா் தமது திருவாதவூர் புராணத்தில் அழகுற இயம்பியுள்ளார். வெம்மையான பிறவிக்கடலில் வீழ்ந்து கிடப்போர் யாவரும் பெரியோர்கள் நம்பிக்கை வைத்துப் போற்றும் சிவநாமம் என்னும் நல்ல தெப்பத்தைப் பிடித்துக்கொண்டால் எமது கடவுளுடைய அருளாகிய முத்திக்கரையில் ஏறுவதற்கு துறையாக இத்தலம்இருக்கின்றமையால் உலகமெல்லாம் இத்தலத்தைத் திருப்பெருந்துறை என்று போற்றுகின்றது. இவ்வாறு திருப்பெருந்துறை எனும் பெயரின் சிறப்பினைத் திருவாதவூர் புராணம் எடுத்துரைக்கின்றது.

புராண அடிப்படையிலும் திருப்பெருந்துறை என்னும் பெயருக்கு ஒரு வரலாறுஉண்டு. அது பின் வருமாறு. மூவேந்தர்களுள் சிறந்த சுகுண பாண்டியன் காலத்திலே சிவபுரத்தில் எழுந்தருளி இருக்கும்

ஆத்மநாத சுவாமிக்கும்ரூபவ் சிவயோகாம்பிகை அம்மைக்கும் நித்திய பூசை முதலியவை செய்யும் பொருட்டு இறக்க முத்தி தரும் தலமாகிய காசியினின்றும் முந்நூறு பிராமணர்கள் அவ்வரசனால் அழைத்து வரப்பட்டனர்.

அப்பிராமணர்களை வந்து சேர்ந்தவுடன் அரசனும் சிவபுரத்தை அடைந்து அவர்களுக்குச் சிறப்பு செய்யக் கருதி முந்நூறு பொன் தட்டுக்களில் முந்நூறு பொன்னாடை வைத்து ஒவ்வொன்றாகக் கொடுத்துக் கொண்டு வரும் பொழுது ஒரு பொன்னாடை ஏற்பவர் இன்றி எஞ்சியது. அரசனும் அந்தணரும் திகைப்படைந்து பல தடவை எண்ணியும் ஒருவர் குறையக் கண்டு மயங்கலானார்கள்.

அப்பொழுது பரம கருணாநிதியாகிய ஆத்மநாத சுவாமி குருந்தமரத்தினின்றும் ஓர் அந்தண வடிவங்கொண்டு தோன்றி அரசனுக்கு முன் வந்துரூபவ் எம்முடன் முந்நூறு எண்ணுந் தொகை நிரம்பிற்றோவென்று மயக்கம் தெளியச் செய்து எஞ்சிய பொன்னாடையையும் பெற்று அவர்களோடு தாமும் ஒருவராய் வீற்றிருந்து விளங்கினார். ஆதலால் அவ்வாத்மாநாத சுவாமிக்கு **“மூவாயிரத்தொருவர்”** என்பது போல முந்நூற்றொருவர் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று.

அதன்பின் சுகுணபாண்டியன் அம்முந்நூற்றுவர்க்கும் முந்நூறு அக்ரகாரங்கட்டுவித்துக் கொடுத்து அச்சிவபுரத்தை அவர்களுக்குச் சர்வ மானியமாகப் பத்திரமம் பிறப்பித்துக் கொடுத்தவிட்டு மதுரையை அடைந்தான்.

அவ்வர்ச்சகர்கள் சுவாமி கொயில் தொண்டுகளையும் அம்மை கோயில் தொண்டுகளையும் இரவு பகல் இடையராது செய்துக்கொண்டு வருதலினாலே தம்புதல்வர்களுக்கு வேத அத்தியயனஞ் செய்து வைப்பதற்க்குச் சமயமின்றித் துயரமுற்று சுவாமியை வேண்டிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது தம் மெய்யடியார் வேண்டிய வேண்டியாங்கீயும் பரங்கருணைத் தடங்கடலாகிய ஆத்மநாதசிவம் ஒரு வயோதிகப் பிரமாண வடிவங்கொண்டு அவ்வந்தணர்களுக்கு முன் எழுந்தருள அது கண்ட அவ்வந்தனர் அவரை எதிர்கொண்டு அழைத்துக் கொண்டு வந்து இருத்தி உபசரித்து, அவரது வேதாத்தியம் செய்யும் வல்லமையைக் கேட்டறிந்து மகிழ்ந்து, தம் புதல்வர்களுக்கு வேதாத்தியனம் செய்து வைக்கும் நல்லாசிரியரா இவரை நியமித்து அதற்குக் காணிக்கையாக வீட்டுக்கொவ்வொரு நாள முறையே முந்நூறு வீட்டுக்காரரும் உணவு முதலியவைகள் கொடுத்து உபசரித்து வர ஆசிரியர் அவ்வந்தணப் பிள்ளைகட்கு வேதபாராயணத்தில் வேறோருவரும் நிகரில்லை என்னும் படி வேத மோதிக் கொடுத்துக் கொண்டு வந்தார். ஆதனால் அவ்வாத்மநாத சுவாமிக்குச் “**சத்த நாதரு பாத்தியாயர்**” என்னும் திருப்பெயர் உண்டாயிற்று.

பின்னர் கௌமார பாண்டியன் காலத்திலே இச்சிவபுரத்துக் கயலூரில் லுண்டாக்கன் என்னும் குறு நில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் இளம் வயதுடைய நெடு நில அரசனாகிய அக்கௌமார பாண்டியனது நட்பினைப் பெற்று அதனால் வலிமையுடையவனாய் வாழ்ந்து வந்தான்.

இவ்வாறு வாழ்ந்தவன் அச்சிவபுரத்தைத் தான் கவர்ந்து கொள்ள எண்ணி அம்முந்நூற்றுவரது சன்மான பத்திரத்தோடு சிவபுரத்தை மெல்ல மெல்லக் கைப்பற்றி உரிமையாக்கிக் கொண்டான்.

அதுகண்ட அந்தணர்கள் வருந்தித் தங்கள் ஆசிரியரோடும் கௌமார பாண்டியனிடத்தில் முறையிட்டுக் கொண்டார்கள். அரசன் அந்தணர்களை நோக்கி அச்சிவபுரம் உம்முடையதென்பதற்கு ஆட்சி, சாட்சி, சாசனம் என்னும் இம் மூன்றும் ஒன்றேனும் இங்கே காட்டி நிலை நிறுத்தக் கடவீர்கள் என்றான்.

அப்பொழுது பாண்டியன் தன் பக்கத்திலிருந்த லுண்டாக்கனைப் பார்த்து இதற்கு நீ சொல்வது யாது? என்று வினவ அவன் இவர்கள் சிவபுரம் தம்முடையதென்று சாதிப்பார்களாயின் உலகில் முயலுக்கிங்கோடுண்டு போலுமென்றால். அப்படியாயின் அச்சிவபுரம் உன்னுடையதென்பதற்கு நீ ஆதாரங்காட்டென்று வினவ அதற்கவன் தொன்று தொட்டுள்ள ஆட்சியே எனக்காதாரமென்று கூறினான். அதற்கு அனுபவஞ்சொல்லென்று அரசன் கேட்க அவன் இரண்டு பனையளவு ஆழமாக வெட்டினாலும் சிவபுரத்திலே தண்ணீர் ஊறாது. இதுவே எனது அனுபவம் என்று கூறினான். அந்தணர்கள் எல்லாம் நெடுநாட்களாக நமது இல்லங்கள் தோறும் விலாப்புடைக்க உண்டு திரிந்த இந்தத் தடுமாறு கிழவன் யாது கூஷூனான் வெட்டுவாய் தோறும் நீர்காட்ட வல்லனோ என்று பதை பதைத்தார்கள்.

அப்பொழுது கௌமாரப்பாண்டியன் ஐயரே நீர் கூறியது உண்மையா என்று மீளவும் கேட்க அவ்வையார் இது சத்தயம், சத்தியம் என்றனர். அப்பொழுது பாண்டியன் லுண்டாக்கனைப் பார்த்து அவர் கூறுவது உண்மையேயானால் அப்பாற் சிவபுரம் ஆளுக்குரிய தென்று கேட்க

இவ்வந்தணர்களுக்கே உரியது என்றான். பின்பு பாண்டியன் அந்தணர்கள் முன்னே அனுப்பிவிட்டுத் தானும்லுண்டாக்கன் பின்னே வரச்சென்று சிவபுரத்தையடைந்துஇ லுண்டாக்கனை மண் வெட்டுக் கருவியினால் வெட்டும்படி பணிக்கஇ அவன் மேட்டு நிலத்தைச சார்ந்து வெட்டும் போது ஆசிரியராகிய சிவப்பெருமானார் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களையும் அங்கே வரும்படி நினைத்தருளினார்.

அங்ஙனமே தீர்த்தங்கள் வந்தமையினால் அவ்வெட்டு வாயிலே நீர்தோன்றி அவன் முகம் கலங்கும்படி மோதிற்கு லுண்டாக்கள் மீளவும் வேறோரிடத்து வெட்டுதலும் முன்னையினும் மிக நீருறிக் குதிக்கொண்டது. இப்படி அவன் வெட்டும் பொழுதெல்லாம் ஒரு காலைக்கொருகால் நீர் மிக்குப் பெருகுதலும் அவன் ஓய்வின்றி மேலும்இ மேலும் அச்சிவபுரமெங்கும் ஓடி ஓடி வெட்டினான். அவ்வெட்டு வாய்கள் தோறும் ஊறிய நீர் பெருகி ஒன்று பட்டு எங்கும் பரந்து ஓர் பெருந்துறையாய் நின்ற காரணத்தினாலே அச்சிவபுரத்துக்கு பெருந்துறையென்னும் காரணப்பெயர் உள்ளதாயிற்று. இதுபோன்ற இன்னும் பல திருப்பெயர்கள் இவ்விறைவருக்கு உண்டென்பதைப் புராணங்கள் வாயிலாக அறிலாம்.

**இருப்பிடமும் சூழலும்**

திருப்பெருந்துறை ஒரு திவ்யத்திருத்தலம் ஆகும். இத்தலம் இன்று ஆவுடையார்கோயில் என்ற பெயரில் வழங்கப்பெற்று வருகிறது. இது மயிலாடுதுறை காரைக்குடி புகைவண்டிப் பாதையில் அறந்தாங்கிக்கு தென்கிழக்கில் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. புதுக்கோட்டைஇ பட்டுக்கோட்டைஇ காரைக்குடி முதலிய ஊர்களிலிருந்து வர பேருந்து வசதிகள் உண்டு.

பாண்டி நாட்டுக்கு உட்பட்டதாக அந்நாட்டின் வடகிழக்கு எல்லையாக முற்காலத்தில் விளங்கிய இவ்வூர் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உட்பட்டதாக அம்மாவட்டத்தின் தென் எல்லையிலிருக்கிறது. வெள்ளாற்றங்கரையில் தோப்பும் துரவும், சோலையும் சாலையும் சூழ்ந்த மணற்பாங்கான இடம். வயற்பரப்பும், சிறுகாடும் கலந்து விளங்குவதால் இவ்வூரை மருதமொடு தழுவித் திகழும் முல்லை நிலம் என்று கூறலாம்.

கோயில் கணக்குகளில் இந்தத் தலம் ஆளுடையார் கோயில் என்றே வழங்கப் பெறுகின்றது. திருமுறைகளிலும் வடமொழி தமிழ் மொழி இலக்கியங்களிலும் அநாகி மூர்த்தித் தலம்இ ஆதிகயிலாயம் உபதேச தலம், குருந்தவனம், சதுர்வேதபுரம், ஞானபுரம், திருமூர்த்திபுரம் கையாயபுரம், தென்கைலை, தேசுவனம் யோக பீடபுரம், யோகவனம் முதலான பல பெயர்களால் குறிக்கப் பெறுகின்றது. திருவாசகம சிவபுரம் என்று குறிக்கின்றது.

திருக்கோயிலை நடுவாக வைத்து ஊர் கிழக்கு மேற்கில் வளர்ந்துள்ளதால் கோயில் பெயரே தலத்திற்கும் ஏற்பட்டது எனக் கருதலாம். இவ்வூரில் பல குளங்களும், கிணறுகளும், ஆறும் சூழ்ந்திருப்பதால் தண்ணீல் வசதிக்குக் குறைவில்லை திருக்கோயிலுள்ள கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ விருப்பத்தோடு சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர்

இவர்களெல்லாம் தங்குவதற்கு ஏற்ற வசதியான பல விடுதிகளும்ரூபவ் மடங்களும் இவ்வூரில் உள்ளன. இத்திருக்கோயில் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமானது.

இங்கு வாழ்கின்ற மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். கல்வி கூடங்கள் காவல்துறை அலுவலகமும், வருவாய்த்துறை அலுவலகமும், அஞ்சலகமும் இவ்வூரில் உள்ளன.

தீர்த்தங்களும் திருக்கோயிலும் கோயிலில் அமைந்துள்ள அதியற்புதமான சிற்பக் கலைச் செல்வங்களும் இவ்வூருக்கு மகத்தான பெருமையைத் தருவனவாக விளங்குகின்றன.

**மூர்த்தி தலம் தீர்த்தம்**

**1. மூர்த்தி ஆத்மநாதர்**

திருப்பெருந்துறை தலத்தின் திருக்கோயில் கருவறையில் இவர் அரூபமாகஇருக்கிறார். கருவறையில் பீடம் மட்டுமே காணப்பெறும். பீடத்துக்கு மேல்சுவாமி அரூபமாகஇருப்பதால் பாணம் காணப் பெறாது. பீடத்துக்குப் பிரணவ பீடம் என்றும், சதுர்வேத பீடம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. பீடத்துக்கு மேல் குவளை சாத்தி அபிஷேகம் முதலியன நடைபெறுகின்றன.

**யோகாம்பிகை**

திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை யோகாம்பிகை எனவும் சிவயோக நாயகி எனவும் பேசப்படுகிறாள். அம்பிகையின் கருவறையில் யோகபீடம் மட்டுமே காணப்பெறும் இங்கே அம்பிகை அருபமாக விளங்குகிறபடியால் உருவத்திருமேனி இல்லை. அந்த பீடத்தின் மேல்யோகாம்பிகை சிவயோகம் புரிகின்றாள்.

**மாணிக்கவாசகர்**

இத்தலத்தில் சோமாஸ்கந்தர் ஸ்தானத்தில் விளங்குகிறவர் மாணிக்கவாசகா, இவருக்குத்தான் உற்சவம் நடைபெறுகிறது. இந்த உற்சவத்தை பக்தோர்ச்சவம் என்று சிலர் கூறுவர். மாணிக்கவாசகர் இறைவனோடு இரண்டறக்கலந்து சாயுச்சிய முக்தி பெற்றவர். ஆகையாலும்ரூபவ் அவர் அறிவாற் சிவமே என்று ஞானிகளால் பேசப்படுவதாலும் இறைவன் வேறு மாணிக்கவாசகர் வேறு என்று எண்ணுவது சிவாபராதம் ஆகையாலும் அவர்க்கு எடுக்கும் திருவிழா பிரம்மோச்சவமே ஆகும். இவருக்கு ஆனி, மார்கழி ஆகிய இரு மாதங்களில் திருவிழா நடைபெறுகின்றன.

**தலம் திருப்பெருந்துறை**

ஆத்மநாதர் அநாதி முத்தராக இங்கே எழுந்தருளி ஐந்தொழில் நடத்தால் இது அநாதி முத்தித் தலமாகும். உருத்திர மூர்த்தி எழுந்தருளியுள்ள திருப்பெருந்துறை சோடசாந்தத் தலம். இத்தலம் கயிலையை விட மேலானாது. இத்தலத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லை. இத்தலத்தை அடைந்தவர்க்கு மீண்டும் பிறப்பு இல்லை. இத்தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு என்று புராணங்கள் பேசுகின்றது. தற்போது ஆவுடையார்கோயில் என்ற பெயர் வழங்கி வருகிறது.

**தீர்த்தம்**

திருப்பெருந்துறையில் பல தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் ஆத்மநாதரால் ஆதியில் உண்டானவை ஒன்பது தீர்த்தங்கள் இவை நவ தீர்த்தம் எனப்படும்.

**சிவ தீர்த்தம்**

இது அம்மாள் சந்நதிக்கு எதிரே கிணறு ரூபமாக இருக்கிறது. இதற்கு ஆத்ம கூபம், ஆன்மநாத கூபம் என்றும் பெயர்கள் உண்டு. அதன் தீர்த்தம் ஆத்மநாதருக்கு அபிஷேகத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

**அக்கினி தீர்த்தம்**

இது ஆத்மநாதர் ஆலயத்தில் தென் மேற்கில் குளமாக இருக்கிறது. இதற்குச் சக்தி தீர்த்தம் திருத்தமாம் பொய்கை என்ற பெயர்கள் உண்டு. இதன் தீர்த்தத்தைக் கண்டாலும் தொட்டாலும, பருகினாலும் நீராடினாலும் நினைத்த பயனைப் பெறலாம்.

**தேவ தீர்த்தம்**

இது ஆத்மநாதர் ஆலயத்தின் எதிரே தெற்குத் திசையில் நெல்லியடி என்ற இடத்தில் பெரிய தடாகமாக விளங்குகிறது. இதற்கு நாத தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இத்தீர்தத்தில் நீராடுவோர் இம்மை இன்பமும் மறுமை போகமும் அனுபவித்து இறுதியில் சிவனடி சேர்ந்து பேரின்பம் எய்துவர்.

**முனிவர் தீர்த்தம்**

இது திருக்கோயிலின் வடக்கு வீதிக்கு அருகில் ஓடையாக இருக்கிறது. இதற்கு விந்து தீர்த்தம், ரிஷி தீர்த்தம் என்ற பெயர்களும் உண்டு. இதில் நீராடினால் சகல பாவங்களும் நீங்கும்.

**அசுர தீர்த்தம்**

இது திருக்கோயிலின் மேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு சதாசிவ தீர்த்தம், குளிச்சிக் குளம் என்ற பெயர்கள் உண்டு. இதில் நீராடுவோர் பாவங்கள் நீங்கி வீடுபேறு அடைவார்கள்.

**வாயு தீர்த்தம்**

இது ஆத்மநாதர் ஆலயத்திற்கு வடமேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு மகேச தீர்த்தம் என்ற பெயரும் உண்டு இத்தீர்த்தத்தில் நீராடினால் தீராத வியாதிகள் தீரும்..

**சிவகங்கை தீர்த்தம்**

இது ஆத்மநாதர் ஆலயத்திற்கு வடகிழக்கே உள்ள கயிலாசநாதர் திருக்கோயிலுக்கு வடக்கே உள்ளது. இதற்கு உருத்திர தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் நீராடுவோர் கயிலாய பதவி பெறுவார்கள்.

**நாராயண தீர்த்தம்**

இது திருக்கோயில் வடக்கு வீதியில் பெருமாள் கோயிலுக்கு மேற்கே ஓடை ரூபமாக இருக்கிறது. இதற்கு விஷ்ணு தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் மூழ்குபவர்கள் முப்பகையும் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்று வீடுபேறு அடைவார்கள்.

**பிரம்ம தீர்த்தம்**

இது திருக்கோயிலுக்கு மேற்குத்திசையில் இருக்கிறது. இது முதன்மையப்பர் சந்நிதிக்குளம் என்று இப்போது சொல்லப்படுகிறது. இதில் மூழ்குகிறவர்கள் மகாபாதகங்கள் எல்லாம் நீங்கப் பெறுவர்.

மேலே சொல்லப்பட்ட நவந்தருபேதமான ஒன்பது தீர்த்தங்களேயன்றி மேலும் அறுபத்து நான்கு கோடி தீர்த்தம், வெள்ளாறு, திருத்தொட்டித் தீர்த்தம் முதலியனவும் திருப்பெருந்துறையில் உள்ளன.

**முடிவுரை**

ஆவுடையார் கோவிலில் உள்ள ஆத்மநாத சுவாமி கோயில் மற்ற கோயில்களில் காணப்படாத பல சிறப்பு அம்சங்களைப் பெற்றிருக்கிறது.இது போன்ற பல தனிச் சிறப்புகளை கொண்டு தமிழகத்தின் கோயிற் பண்பாட்டின் சின்னமாக ஆவுடையார் கோவில் விளங்குகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ஜெ.ராஜமுகமது, புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, அரசு அருங்காட்சியாக வெளியீடு, சென்னை, 2004.
2. ப.மகாலிங்கம்., திருப்பெருந்துறை தல வரலாறு, திருவாவடுதுறை ஆதின வெளியீடு. திருவாடுதுறை, 2ம் பதிப்பு, 2009
1. சு.குஞ்சிதபாதம், திருபெருந்துறை தல வரலாறு, திருவாவடுதுறை ஆதின வெளியீடு, திருவாடுதுறை, 3ம் பதிப்பு, 2013.
2. மேவாணி கோபாலன், புதுக்கோட்டை மாவட்ட ஆலயங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2008
3. வீ.ஜெயபால், சைவ நால்வரால் பாடல் பெற்ற திருத்தலங்கள்,திருவாசகத் தலங்கள், சைவ சித்தாந்த ஆய்வு மையம், தஞ்சாவூர், 2014
4. ஆவுடையார் கோவில் எனும் திருப்பெருந்துறை சொற்பொழிவுகள்